# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டம், தேசிய சுகாதார திட்டத்தில் மாவட்ட சுகாதார சங்கம் மூலம் கன்னியா'குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் மாவட்ட தொடக்க நிலை இடையீட்டு சிகிச்சைகள் மையத்தில் (DEIC) Special Educator for Behavioural Therapy-1, Occupational Therapists-1 மற்றும் Social Worker - 1 என மூன்று புதிய ஒப்பந்த பணியிடங்களும், முட்டம் மற்றும் செண்பகராமன்புதூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள இரண்டு இயன்முறை மருத்துவர்கள் என மொத்தம் ஐந்து பணியிடங்கள் முற்றிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது.

1. **Special Educator for Behaviour Therapy** - 1 பணியிடம்
2. **Occupational Therapists** - 1 பணியிடம்
3. **Social Worker** - 1 பணியிடம்
4. இயன்முறை மருத்துவர் **(Physiotherapists)** - 2 பணியிடம்

இப்பணியிடத்தினை நிரப்புவதற்கு தேவையான தகுதிகள், இனசுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் **www.Kanniyakumari.nic.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 20.01.2025 மாலை 5.00 மணிக்குள் மாவட்ட சுகாதார அலுவலகம், கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில்-1 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செயல் அலுவலர், மாவட்ட சுகாதார சங்கம்,
கன்னியாகுமரி மாவட்டம் /
மாவட்ட சுகாதார அலுவலர் (மு.சுவ.பொ.),
நாகர்கோவில் சுகாதாரப்பகுதி மாவட்டம்.

தலைவர், மாவட்ட சுகாதார சங்கம்,
கன்னியாகுமரி மாவட்டம் /
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில்.

83
2-1-25

# காலிப்பணியிட விவரம்

| வ. எண் | பதவியின் பெயர் மற்றும் காலிப்பணியிடம் விவரம் | பதவி யின் எண்ணிக்கை | தற்காலிக ஒப்பந்த ஊதியம் (மாதம் ஒன்றிற்கு) | கல்வி தகுதி | வயது வரம்பு (16.12.2024-ன்படி) | நிரப்பப்படும் இனச்சுழற்சி விவரம் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இயன்முறை மருத்துவர் (Physiotherapists) **முட்டம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்** | 1 | ரூ.13000 | **Bachelor of Physiotherapy (BPT) from any recognized University** | Should not be over 40 years of age/40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | பொது போட்டி - முன்னுரிமை பெற்றவர் GT-P-1 | 11 மாத ஒப்பந்த முடிவு அல்லது திட்ட செயலாக்க முடிவு இதில் எது முன்னதோ அதுவரை |
| 2 | இயன்முறை மருத்துவர் (Physiotherapists) **செண்பக ராமன்புதூர்** வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் | 1 | ரூ.13000 | **Bachelor of Physiotherapy (BPT) from any recognized University** | Should not be over 40 years of age/40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (பெண்கள் ஆதரவற்ற விதவை) -1 | 11 மாத ஒப்பந்த முடிவு அல்லது திட்ட செயலாக்க முடிவு இதில் எது முன்னதோ அதுவரை |
| 3 | Special Educator for Behavioural Therapy KKMCH, Asaripallam | 1 | ரூ.23000 | Bachelor's /Master's Degree in Special Education in Intellectual Disability from a UGC-recognized University. The person should have live RCI (Rehabilitation Council of India) registration with a valid number | Should not be over 40 years of age/40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | பொது போட்டி - முன்னுரிமை பெற்றவர் GT-P-1 | 11 மாத ஒப்பந்த முடிவு அல்லது திட்ட செயலாக்க முடிவு இதில் எது முன்னதோ அதுவரை |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | Occupa tional Therapist KKMCH, Asaripallam | 1 | ரூ.23000 | Bachelors /Master's Degree in Occupational Therapy from a recognized university | Should not be over 40 years of age/40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | பொது போட்டி - முன்னுரிமை பெற்றவர் GT-P-1 | 11 மாத ஒப்பந்த முடிவு அல்லது திட்ட செயலாக்க முடிவு இதில் எது முன்னதோ அதுவரை |
| 5 | Social Worker KKMCH, Asaripallam | 1 | ரூ.23800 | Master of Social Work (MSW) | Should not be over 40 years of age/40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | பொது போட்டி - முன்னுரிமை பெற்றவர் GT-P-1 | 11 மாத ஒப்பந்த முடிவு அல்லது திட்ட செயலாக்க முடிவு இதில் எது முன்னதோ அதுவரை |

செயல் அலுவலர், மாவட்ட சுகாதார சங்கம்,
கன்னியாகுமரி மாவட்டம்/
மாவட்ட சுகாதார அலுவலர் (மு.கூ.பொ.)
நாகர்கோவில் சுகாதாரப்பகுதி மாவட்டம்.

தலைவர், மாவட்ட சுகாதார சங்கம்
கன்னியாகுமரி மாவட்டம்/
மாவட்ட ஆட்சி தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில்.

## விண்ணப்ப படிவம்

## மாவட்ட சுகாதார சங்கம் கன்னியாகுமரி மாவட்டம்

(புகைப்படம்)

**விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்:** ............................................

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பத்தாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார்/ கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது (16.12.2024 அன்று) | : | |
| 4. | இனம் (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 5. | கல்வி தகுதி (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 6. | கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | |
| 7. | தற்காலிக முகவரி / நிரந்தர முகவரி | : | |
| 8. | முன்னுரிமை சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும் (அரசாணை எண்.122, மனிதவள மேலாண்மைத் (கே.2) துறை, நாள் 02.11.2021) | : | |

இடம்:

தேதி:

விண்ணப்பதாரரின் கையொப்பம்

குறிப்பு:

இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ் நகல்கள்

1. Evidence of Date of Birth (Birth Certificate/SSLC/HSC Certificate).
2. Evidence of Educational and Qualification and marks (10th/12th/Diploma/Provisional/Course Certificate etc.,)
3. Proof of Residency Voter ID, Aadhar Card, Ration Card, Phone Bill/EB Bill.
4. No Objection Certificate from the competent authority (if applicable).
5. Any other special records of significance from competent authorities as indicated in the selection criteria mentioned.

**Terms and Conditions**

1. The above posts are on contractual basis and purely temporary in nature.
2. The contractual service will not be regularized on any account and there would be no grounds for permanent absorption.
3. On selection 11 month contract agreement has to be provided at the time of appointment.
4. Contract may be renewed after completion of 11 month period subject to performance appraisal.
5. In case of selection the contract appointment will be subject to Medical fitness and verification of character and antecedents.
6. The selected candidates will have to join duty immediately or on the date indicated in the offer of appointment within 3 working days.
7. An absence from work for a period of 7 days without prior permission of the competent authority will amount to voluntary abandonment of Engagement and may result in automatic termination.
8. Once recruited/contracted for a post, prior notice of 30 days in mandatory for resignation.
9. விண்ணப்பதாரர் சமீபத்திய புகைப்படத்துடன் மேற்காணும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து அத்துடன் சுய சான்று (Self Attested) ஒப்பமிட்ட சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.
10. நேர்காணலின் போது அசல் ஆவணங்கள் மற்றும் முன்அனுபவச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.

..............

சுருக்கம்

பொதுப்பணிகள் - கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள், முதல் தலைமுறை பட்டதாரிகள் மற்றும் தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசுப் பணியிடங்களில் முன்னுரிமை வழங்குதல் மற்றும் வேலைவாய்ப்பகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணி நியமனங்களில் பின்பற்றப்பட்டு வரும் முன்னுரிமை முறையினை மறுசீரமைப்பு செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

மனித வள மேலாண்மைத் (கே.2) துறை

அரசாணை (நிலை) எண். 122 | நாள்: 02.11.2021

பிலவ வருடம், ஐப்பசி 16
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.188, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர்-ப்பி) துறை, நாள் 28.12.1976.
2. அரசாணை (நிலை) எண்.398, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 13.09.1990.

.....

ஆணை :

2021-2022-ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையில், 21.06.2021 அன்று பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக தமிழ்வழியில் பயின்றவர்களுக்கும், அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கும், அரசுப் பதவிகளுக்கான வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்"

2) மேலும், 13.09.2021 அன்று மனித வள மேலாண்மைத் துறையின் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை தொடர்பான உரையின் போது, மாண்புமிகு அமைச்சர் (நிதி, மனித வள மேலாண்மை) அவர்களால் சட்டமன்ற பேரவையில் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசுப் பணியிடங்களில் பின்வரும் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:-

i. கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்
ii. முதல் தலைமுறை பட்டதாரிகள்
iii. தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள்"

3) மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், வேலைவாய்ப்பகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி பணி நியமனங்களில், போரில் உடல் தகுதியை இழந்த இராணுவத்தினர், ஆதரவற்ற விதவைகள், கலப்பு திருமண தம்பதியினர் உள்ளிட்ட சில பிரிவினருக்கு முன்னுரிமை வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாணையின்படி, ஒவ்வொரு முறையும், நான்கு தொகுதிகளாக பிரித்து வைக்கப்பட்டுள்ள முன்னுரிமை வரிசைப்படி (Order of priority) ஆரம்பத்திலிருந்து வேலைவாய்ப்பகங்கள் பரிந்துரை செய்வதால், அந்த அரசாணையில் உள்ள அனைத்து முன்னுரிமை இனத்தவருக்கும் இந்த நன்மை சேராத நிலை தற்போது உள்ளது. எனவே, 1970-ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வரும் முன்னுரிமை வழங்கும் முறையினை சீரமைத்து மறுவெளியீடு செய்யும் வகையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டன.

4) 2021-2022-ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ள அறிவிப்பு மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை தொடர்பான உரையின் போது மாண்புமிகு அமைச்சர் (நிதி, மனித வள மேலாண்மை) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு, ஆகியவற்றினை செயல்படுத்தும் வகையிலும், வேலைவாய்ப்பகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணி நியமனங்களில் பின்பற்றப்பட்டு வரும் முன்னுரிமை முறையினை மறுசீரமைப்பு செய்யும் வகையிலும், பின்வரும் ஆணைகளை வெளியிட அரசு முடிவு மேற்கொண்டு, அவ்வாறே ஆணையிடுகிறது:-

(i) தற்போது நடைமுறையில் உள்ள முன்னுரிமை முறையினை செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை களையும் பொருட்டு, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தொகுதி I, II, III, IV என்று முன்னுரிமை பிரிவினர்களை நான்கு

தொகுதிகளாக பிரிக்கும் முறையினை விடுத்து அம்முன்னுரிமைப் பட்டியலானது இவ்வாணையுடனான இணைப்பில் கண்டுள்ளவாறு ஒரே வரிசைக்கிரமமாக மாற்றி அமைக்கப்படுகிறது.

(ii) அரசுப் பணியிடங்களுக்கு, மேற்கொள்ளப்படும் பணியாளர் தெரிவுகளில், வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பதிவுதாரர்களின் பட்டியலை பெறுவதுடன் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டு விண்ணப்பங்களைப் பெற்றும் மேற்கொள்ளப்படும் நடைமுறையில், இட ஒதுக்கீடு விதிகளுக்குட்பட்டு (Vertical, Horizontal and Persons Studied in Tamil Medium), இம்முன்னுரிமை அளிக்கப்படும் முறை பின்பற்றப்பட வேண்டும்.

(iii) அத்தகைய பணியாளர் தெரிவுகளில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, முன்னுரிமை பெற்றோர் (Priority categories) மற்றும் முன்னுரிமையற்றோருக்கு (Non-Priority categories) இடையே 1 : 4 என்கிற விகிதாச்சாரம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(iv) முன்னுரிமை சுழற்சிகளின்படி மேற்கொள்ளப்பட்ட நேரடி நியமனங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய பதிவேடு (Priority Register), தொடர்புடைய நியமன அலுவலர்களால் பராமரிக்கப்பட வேண்டும்.

(v) ஒவ்வொரு முறையும் முன்னுரிமை வரிசைப்படி (order of priority) ஆரம்பத்திலிருந்து பரிந்துரை செய்வதால், பட்டியலில் உள்ள அனைத்து முன்னுரிமை இனத்தவருக்கும் இந்த நன்மை சேராத நிலை தற்போது உள்ளது. அதனை மாற்றி, இவ்வாணையுடனான இணைப்பில் கண்டுள்ள பட்டியலில் இடம்பெற்றுள்ள முன்னுரிமை பிரிவு ஒவ்வொன்றினையும், அவற்றின் வரிசை எண்களை அடிப்படையாக கொண்ட சுழற்சி முறையினை (Cyclic order) பின்பற்றி, முன்னுரிமைக்குரிய (Priority turn) பணியிடத்திற்கு பரிசீலிக்கப்பட வேண்டும். முன்னுரிமை சுழற்சி பதிவேட்டின் அடிப்படையில், ஒரு தெரிவில் எந்த முன்னுரிமை வரிசை எண்ணில் பணி நியமனம் முடிவடைகிறதோ, அதற்கு அடுத்த முன்னுரிமை வரிசை எண்ணிலிருந்து அடுத்த தெரிவில் முன்னுரிமை தொடங்கப்பட வேண்டும். (i.e., Selection shall be made from the next turn to the turn ended in the earlier selection).

5) மேற்காணும் ஆணைகளை பின்பற்றி முன்னுரிமை பெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக்கான பணியிடங்களுக்கு நியமனங்கள் மேற்கொள்ளும்போது, இனசுழற்சி விதிகள் (Rule of reservation) தவறாமல் பின்பற்றப்பட வேண்டும். மேலும், வேலைவாய்ப்பகங்களிலிருந்து பட்டியலை பெறுவதுடன், தினசரி நாளிதழ்களிலும் விளம்பரம் வெளியிட்டு விண்ணப்பங்களைப் பெற்று மேற்கொள்ளப்படும் பணிநியமனங்களுக்கு மட்டுமே இவ்வாணை பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மைதிலி க. இராஜேந்திரன்
அரசு செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / முதன்மைச் செயலாளர்கள் / செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 600 009.

ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-600 032.

தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாடு துறை, தலைமைச் செயலகம், சென்னை-600 009.

அனைத்து துறை தலைவர்கள் (தலைமைச் செயலகத் துறை வழியாக).

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

பதிவாளர், சென்னை உயர் நீதிமன்றம், சென்னை / மதுரை கிளை.

காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை - 600 004.

செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009.

நகல்:

முதலமைச்சரின் செயலாளர் - III, முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.

தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை - 600 009.

மனித வள மேலாண்மைத் துறை செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை - 600 009.

மனித வள மேலாண்மைத் (நி.சீ.2) துறை, சென்னை - 600 009. (தமிழ்நாடு அரசு இணையதளத்தில் பதிவேற்றும் பொருட்டு)

இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஜெ. அனந்தராமன் 03.11.21
பிரிவு அலுவலர்

3.11.2021

## இணைப்பு

(அரசாணை (நிலை) எண்.122, மனித வள மேலாண்மைத் (கே) துறை,
நாள்: 02.11.2021)

(1) **கொரோனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன் / மகள்).**
(அரசாணை (நிலை) எண்.8, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 10.01.2000-ல் தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை இவ்வினத்தில் சேர்க்கப்பட்டுள்ளது)
(Heirs (Sons / Daughters) who have lost both father and mother)

விளக்கம்:-

தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும், தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள், அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும், அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற தாய், தந்தையற்ற நபர்கள், வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் சான்றிதழ் அடிப்படையிலும், முன்னுரிமை பெற தகுதியுடையவராவார்கள்.

(2) முதல் தலைமுறை பட்டதாரிகள்.

(3) தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள்.

(4) போரில் உடல் தகுதியை இழந்த முன்னாள் இராணுவத்தினர்.
(Disabled Ex-Servicemen including Ex-Indian Peace Keeping Force Personnel-Disabled Ex-servicemen mean Ex-servicemen who while serving in the armed forces of the Union were disabled in operation against enemy or in disturbed areas)
(அரசாணை (நிலை) எண்.134, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 19.03.1990-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(5) போரில் மரணமடைந்த அல்லது உடல் தகுதியை இழந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினரில் இரண்டு நபர்கள் வரை.
(Upto two members of the family (Widows / Sons / Daughters / next of kin) of the enrolled personnel of the Armed Forces including the Indian Peace Keeping Force who were killed or disabled in action and are totally unfit for re-employment leaving their families in indigent circumstances; and

Upto two members of the family (Widows / Sons / Daughters / next of kin) of Border Security Force Personnel killed in action, and

Upto two members of the family (Widows / Sons / Daughters / next of kin) of the personnel of Assam Rifles killed in action, and

.....2

Ex-personnel of Indo Tibetan Border Police/Disabled Personnel of Indo Tibetan Border Police boarded out or retired prematurely due to service conditions.

Upto two members of the family (Widows / Sons / Daughters / next of kin) of the Personnel of the Into Tibetan and Border police who were killed or disabled in action and are totally unfit for re-employment leaving their families in indigent circumstances)

(அரசாணை (நிலை) எண்.134, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை. நாள் 19.03.1990-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(6) ஆதரவற்ற விதவைகள்.
(Destitute Widows)
(அரசாணை (நிலை) எண்.229, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை. நாள் 07.04.1988-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(7) கலப்பு திருமண தம்பதியினர் (தம்பதியரில் ஒருவர் ஆதிராவிடர் அல்லது பழங்குடி இனத்தவராக இருக்க வேண்டும்)
(Inter-caste married couple (where one of the spouse belongs to Scheduled Caste / Scheduled Tribe)
(அரசாணை (நிலை) எண்.939, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை. நாள் 24.09.1986-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(8) முன்னாள் இராணுவத்தினர் அல்லது அவர்களது மனைவி அல்லது மகன் அல்லது திருமணமாகாத மகள் மற்றும் தற்போது பணியில் உள்ள இராணுவத்தினரின் மனைவி அல்லது மகன் அல்லது திருமணமாகாத மகள்.
(Ex-Servicemen and Ex-Indian Peace Keeping Force Personnel and the wives. sons and unmarried daughters of serving Military Personnel, of Ex-Servicemen and of Ex-Indian Peace Keeping Force)
(அரசாணை (நிலை) எண்.134, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை. நாள் 19.03.1990-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(9) சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் தமிழ்மொழி காவலர்களின் நேரடி வாரிசுதாரர்கள்.
(The legal heirs of Freedom Fighters and Tamil Savants)
(அரசாணை (நிலை) எண்.59. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை. நாள் 04.05.1999-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(10) பர்மா. இலங்கை. கென்யா. உகாண்டா மற்றும் தான்சானியா நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய இந்தியர்கள்.
(Indian Nationals returning from Burma / Sri Lanka and East African countries of Kenya, Uganda and Tanzania due to repatriation)
(அரசாணை (நிலை) எண்.188, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர் - ப்பி) துறை. நாள் 28.12.1976-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(11) அரசின் திட்டங்களுக்காக நில ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர்.
(Members of the family (including members of Scheduled Caste / Scheduled Tribe) whose lands have been acquired for Government purposes as well as for the projects of the Public Sector Undertakings subject to the condition that preference should be given to those who are dependent for their livelihood primarily or wholly on the lands acquired and from among them, to members of the Scheduled castes and Scheduled Tribes who may be eligible for employment)
(அரசாணை (நிலை) எண்.188, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர் - ப்பி) துறை, நாள் 28.12.1976-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(12) மாற்றுத்திறனாளிகள்.
(The Differently abled persons viz., the blind, the deaf, orthopedically handicapped persons, mentally retarded and leprosy cured etc., provided the handicap is not such as would render the candidate unfit for efficiently discharging the duties attached to the post)
(அரசாணை (நிலை) எண்.149, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 11.11.2011-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(13) மாநில அரசு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டோர்.
(Discharged Government Employees (State))
(அரசாணை (நிலை) எண்.248, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 19.03.1984-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(14) மீட்கப்பட்ட கொத்தடிமைகள் அல்லது அவர்களது மகன் அல்லது திருமணமாகாத மகள்.
(Persons freed from bonded Labour System; Sons and unmarried daughters of the released bonded labourers)
(அரசாணை (நிலை) எண்.359, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 06.04.1981 மற்றும் அரசாணை (நிலை) எண்.1376, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 21.06.1984-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(15) தமிழ்நாடு அரசின் கீழ் வரும் விழிப்புப்பணி நிறுவனம் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகள்.
(Inmates and Ex-inmates of Approved Schools and Vigilance institutions under the Government of Tamil Nadu)
(அரசாணை (நிலை) எண்.568, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 26.05.1980 மற்றும் அரசாணை (நிலை) எண்.854, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 24.08.1984-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(16) இரு மொழித் திட்டம் செயலாக்கத்தினால் பணியிழந்த இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள்.
(The Hindi Pandits and other language Pandits who have been ousted on account of introduction of two Language Formula)
(அரசாணை (நிலை) எண்.188, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர் - ப்பி) துறை, நாள் 28.12.1976-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(17) பிராந்திய படையில் ஆறு மாதத்திற்கு மேல் பணிபுரிந்து. பின்னர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து பிராந்திய படையில் பகுதி நேர பணியாளராக பணிபுரிவோர்.
(Persons who have served in the Territorial Army for more than six months and on their discharge revert to part-time employment in the Territorial Army).
(அரசாணை (நிலை) எண்.959, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை. நாள் 16.10.1987-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(18) அவசர காலத்தில் பிராந்திய படை மற்றும் துணை விமானப் படையில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக ஆறு மாதத்திற்கு மேல் பணிபுரிந்து பின்னர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.
(Territorial Army Personnel and Ex-Servicemen of the Auxiliary Air Force who were embodied in the present emergency and have been disembodied after a continuous engagement of over six months)
(அரசாணை (நிலை) எண்.188, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர் - ப்பி) துறை, நாள் 28.12.1976-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(19) பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவன பணியாளர்கள்.
(All the retrenched Employees of the Census Organization)
(அரசாணை (நிலை) எண்.30, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை நாள் 16.02.2000-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

(20) 31.12.1984 வரையில், குறைந்தது ஒரு வருட காலம் பணிபுரிந்த இளைஞர் சேவைப்படை தன்னார்வலர்கள்.
(Persons who have worked as Youth Services Corps Volunteers for a minimum period of one year upto 31.12.1984)
(அரசாணை (நிலை) எண்.188, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர் - ப்பி) துறை, நாள் 28.12.1976-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

// உண்மை நகல் //

ஜெ. அனந்தராமன் 03.11.21
பிரிவு அலுவலர்
3.11.21